பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | ஆனி 23 செவ்வாய்க்கிழமை | 07.07.2020 | கதிர் 111


## கைதிக்கு கொரோனா!

கொழும்பு, ஜூலை 07

வெலிக்கடை சிறையில் உள்ள கைதி ஒருவருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவை பணிப்பாளர் விசேட மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

2



## அஹிம்சை வழியில் தமிழர் உரிமைகளை பெறமுடியும்

### உறுதிபடக் கூறுகின்றார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜூலை 08

ஆயுதம் இல்லாமல் - வன்முறை இல்லாமல் - அஹிம்சை மூலம், ராஜதந்திர நகர்வுகள் மூலம் எமக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என வாக்குறுதி அளிக்கிறேன். இதை நம்புபவர்கள் எனக்கு வாக்களிப்பது தொடர்பில் சிந்தியுங்கள்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன்.

2

## சிவில் பாதுகாப்பு பணியாளர் கைது!

கிளிநொச்சி, ஜூலை 09

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பளையில் வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

2

## சருகுப்புலியிடம் சிக்கி ஒன்பது ஆடுகள் பலி!

### மாவைகலட்டியில் சம்பவம்



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை

வலி.வடக்கு மாவை கலட்டியில் சருகுப்புலியின் வேட்டைக்கு இரையாகி 9 ஆடுகள் உயிரிழந்துள்ளன என்று காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த செல்வகாந்தன் பாமினி என்பவருடைய குடும்பத்தின் வாழ்வாதாரமான ஆடுகளே இவ்வாறு உயிரிழந்துள்ளன.

மாவை கலட்டிப் பகுதியில் இன்று காலை வீடு ஒன்றுக்குள் புகுந்த சருகுப்புலி அங்கு கட்டப்பட்டிருந்த 14 ஆடுகளைக் கடித்துக் குதறியுள்ளது. அவற்றில் 9 ஆடுகள் உயிரிழந்ததுடன் 5 ஆடுகள்

2

## கூரிய ஆயுதங்களுடன் ஏழு பேர் இராணுவத்தினரிடம் சிக்கினர்!

யாழ்ப்பாணம், ஜூலை 07

தென்மராட்சி, வரணிப் பகுதியில் கூரிய ஆயுதங்களுடன் நள்ளிரவில் நடமாடிய ஏழு பேரை இராணுவத்தினர்பிடித்துக்கொடிகாமம்பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வரணிப் பகுதியில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் நேற்று நள்ளிரவு ஐந்து மோட்டார் சைக்கிள்களில் பயணித்த ஏழு பேரை வழிமறித்துச்

2

## தமிழ்த் தலைமைகளால்தான் நிரந்தரத் தீர்வு கிட்டவில்லை!

### கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 07

13ஆவது திருத்தச் சட்டத்தையும் ஒற்றையாட்சி முறைமையையும் தமிழ்த் தலைமைகள் ஏற்றுக்கொண்ட காரணத்தினாலேயே இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுத் திட்டத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

2

## சமுத்தி உத்தியோகத்தரின் வீடு மீது இரவில் தாக்குதல்!

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 07

கோண்டாவில் கிழக்கு ஞானவைரவர் ஒழுங்கையில் அமைந்துள்ள சமுத்தி உத்தியோகத்தரின் வீடு மீது இனந்தெரியாத நபர்கள் நேற்று இரவு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேர் கொண்ட கும்பலே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளானர்.

## 19 ஆவது திருத்தத்தை நீக்க 2/3 பெரும்பான்மை தேவை

### ஆதரவு கோருகின்றார் மஹிந்தர்

கொழும்பு, ஜூலை 09

19ஆவது திருத்தத்தை நீக்குதல், அரசமைப்பில் மாற்றம் மேற்கொள்ளுதல், சுயாதீன ஆணைக்குழு நியமிக்கப்படும் முறையில் மாற்றம் மேற்கொள்ளுதல் போன்ற பிரதான விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரம் கொண்டதாக அரசு அமையவேண்டும் என எதிர்பார்க்கின்றார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைவரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வீரகெட்டிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

2

## தேடப்பட்டு வந்த பொலிஸ் அதிகாரி சரணடைந்தார்!

தலைமறைவாக இருந்த போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பொலிஸ் இன்ஸ்பெக்டர் இன்று சரணடைந்துள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சமன் வசந்த குமார மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட போதைப்பொருளை மீள விற்பனை செய்தமை, போதைப்பொருள் கடத்தல், போதைப்பொருள் கடத்தல்காரர்களிடமிருந்து வாங்கிய துப்பாக்கிகளைப் பாதாள உலகக்குழுவிடம் விநியோகித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

2

## உதிரியாகப் பிரிந்து நின்றால் தமிழர்களின் பலம் சிதையும்!

### எச்சரிக்கின்றார் சிவஞானம்

யாழ்ப்பாணம், ஜூலை 07

உதிரியாகப் பிரிந்து நின்றால் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவப் பலம் சிதையும் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை வலிகாமம் கிழக்கில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலையே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

2



## விமானப்படையினர் மீது கேப்பாபிலவில் தாக்குதல்!

### இரு இளைஞர்கள் கைது

முல்லைத்தீவு, ஜூலை 07

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப் படையினர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

நேற்று மாலை முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்படைத்தளத்தைச் சேர்ந்த இரண்டு விமானப்படையினர் சூரிபுரம் பகுதிக்கு பாதுகாப்பு கடமைகள் நிமித்தம் சென்றபோது அங்கு கூடி நின்ற இளைஞர்களுக்கும் விமானப்படையினருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் கைகலப்பாக மாறியுள்ளது

இளைஞர்கள் சிலர் இரண்டு விமானப் படையினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

2

# அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தல்

அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்கள் மற்றும் சிரேஷ்ட உதவி செயலாளர்கள் அனைவருக்கும் இன்று காலை 10 மணிக்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

விஷேட கலந்துரையாடலிற்காக அவர்கள் அழைக்கப்பட்டனர் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் பிரச்சார காலத்தில் அரசாங்க சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு சொந்தமான வாகனங்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன எனவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்கள் மற்றும் சிரேஷ்ட உதவி செயலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல் குறித்து இன்னும் தகவல் வெளியாகவில்லை.

## தமிழ்த் தலைமை .......

அவர் மேலும் கூறுகையில் -

தமிழ்தேசியமக்கள்முன்னணியைத் தவிர தமிழ் தரப்புக்கள் என்று ஏற்றுக்கொள்ளக் கூடிய அனைத்து தரப்புக்களும் இந்த ஒற்றையாட்சி இடைக்கால அறிக்கையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

சரித்திரத்தில் முதல் தடவையாக நான்காவது அரசமைப்பு இலங்கையில் கொண்டுவரப்படவுள்ள நிலையில் - அந்த நான்காவது அரசமைப்பு ஒரு ஒற்றையாட்சியாக இருக்கின்ற நிலையில் தமிழ் மக்கள் அதனை ஆதரிக்கும் நிலைமை உருவாகப் போகிறது.

சர்வதேசம் இன்றைக்கும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் அரசமைப்பொன்று உருவாக்கவேண்டும் என்பதில் தெளிவாக இருக்கின்றது.

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் அரசமைப்பு உருவாக்கப்பட்டால்தான் இந்தத் தீவில் இனப் பிரச்சினை இல்லை எனவும் நிலைத்து நிற்கக்கூடிய சமாதானத்தையும் அபிவிருத்தியையும் அடைய முடியும் என்பதையும் வலியுறுத்துகின்றார்கள்.

ஆனால், அந்த இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்ற விடயத்திலே, போருக்குப் பிற்பாடு இதுவரை எமது தலைவர்களாக இருந்தவர்கள் 13ஆவது திருத்தத்தையும் ஒற்றையாட்சியையும் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருந்தபடியால்தான் இன்று ஆபத்து உருவாகியிருக்கிறது - என்றார்.

## கூரிய ஆயுதங்களுடன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

அவர்களிடம் வாள்கள், கோடரி, கொட்டன் தடிகள் என்பன காணப்பட்ட நிலையில் அவர்களைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## 19 ஆவது திருத்தத்தை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில் -

ஐக்கிய தேசிய கட்சி பிளவுப்பட்டுள்ளமை காரணமாகப் பெரும் எண்ணிக்கையானோர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைவதற்கு ஆயத்தமாகியுள்ளனர். இந்நிலையில், அனைவரையும் இணைத்துக் கொண்டு மூன்றில் இரண்டு பங்கு என்ற சிறந்த வெற்றியை நோக்கிப் பயணிக்கும் அத்தியாவசிய சந்தர்ப்பம் இதுவாகும்.

இம்முறை பொதுத் தேர்தலில் அதிக ஆசனங்களின் எண்ணிக்கையை வெற்றி கொள்வதற்காக இளைஞர்கள் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கொள்ள வேண்டும்.

எதிர்காலத் தலைமைத்துவத்திற்காக வலுவான கட்சிக்கு, வலுவான அரசுக்கு உறுப்பினர்களாகுவதற்காக அவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் பின்வாங்காமல் வருவார்கள் என நம்புகின்றேன் - என்றார்.

## விமானப்படையினர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது காயமடைந்த 35 வயதுள்ள விமானப்படைச் சிப்பாய் ஒருவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து முள்ளியவளை பொலிஸார் விமானப்படையினர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் இளைஞர்கள் இருவரைக் கைது செய்துள்ளனர்.

இவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முள்ளியவளை பொலிஸார் கூறினர்.

## தேடப்பட்டு வந்த .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் அவர் தலைமறைவாக இருந்தார். அவரை அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் இன்று அறிவித்தல் விடுத்துள்ள நிலையில், கடவத்தை பொலிஸ் நிலையத்தில் அவர் சரணடைந்துள்ளார்.

## அஹிம்சை வழியில் தமிழர் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு இன்னொரு பெயர் சமஷ்டிக் கட்சி. தசாப்த காலங்களில் சமஷ்டியை எதிர்த்தவர்கள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ். ஆனால் இன்று அவர்களும் சமஷ்டியைப் பெற்று தருகிறோம் எனச் சைக்கிளில் வருகிறார்கள். சமஷ்டி மூலம் தீர்வைப் பெற முடியும் என நம்புபவர்கள் எம்முடன் இணைந்து பயணிக்க முடியும். சமஷ்டி மூலம் எமக்கான ஆட்சியை ஏற்படுத்துவோம்.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கொண்டு முதலமைச்சராகி முதலமைச்சர் கதிரையில் இருந்தவர் என்றுதான் முன்னாள் நீதியரசரைச் சொல்ல முடியும். முதலமைச்சர் எனச் சொல்ல முடியாமல் உள்ளது. வடக்கு மாகாண சபையின் ஆட்சிக்காலம் முடிவடைந்து ஒரு கிழமைக்குள் அவர் கட்சி ஆரம்பித்துள்ளார். ஆட்சிக் காலத்தில் கட்சி ஆரம்பித்திருந்தால், முதலமைச்சர் கதிரை இல்லாமல் போயிருக்கும். அவரது கட்சிக் கொள்கை என்னவென்று தெரியவில்லை.

பிரபாகரன் ஆயுதத்தால் பெற முயற்சித்ததைத்தான் சுமந்திரனும் பெற முயற்சிக்கின்றார் எனச் சிங்கள ஊடகங்களில் செய்திகள் வெளிவருகின்றன. ஆனால் சில தமிழ் ஊடகங்கள் இங்கே மாறி சொல்கின்றார்கள். தமிழ் தேசியத்துக்கு எதிரானவர் சுமந்திரன் எனவும், தேசியத்தைக் காக்க சுமந்திரனுக்கு வாக்களிக்காதீர்கள் எனவும் சொல்கின்றார்கள்

போராட்டங்களை, தியாகங்களைப் பயன்படுத்தி வாக்கு பெறமாட்டேன். அவர்களின் அர்ப்பணிப்பை மதிப்பவன் நான். அவர்களின் தியாகங்கள், அர்ப்பணிப்புகளைப் பயன்படுத்தி வாக்கு பெற முயல்பவர்களே அவர்களைக் கொச்சைப்படுத்துபவர்கள். எனக்கு ஆயுதம் மீது நம்பிக்கை இல்லை. நம்பிக்கை இருந்திருந்தால் 83ஆம் ஆண்டு யாழ்ப்பணத்துக்கு அகதியாக வந்தபோதே ஆயுதம் தூக்கியிருப்பேன். ஆயுதம் எடுத்துத்தான் உங்களுக்கு உரிமை பெற்று தருவேன் என வாக்குறுதி தரவில்லை. ஆயுதம் எடுத்துத்தான் உரிமையைப் பெற முடியும் எனச் சிந்தித்தால் எனக்கு வாக்களிக்க வேண்டாம்.

நான் உங்களுக்கு தரும் வாக்குறுதி ஆயுதம் இல்லாமல், வன்முறை இல்லாமல், அஹிம்சை மூலம், ராஜதந்திர நகர்வுகள் மூலம் எமக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என வாக்குறுதி அளிக்கிறேன். இதை நம்புபவர்கள் எனக்கு வாக்களிப்பது தொடர்பில் சிந்தியுங்கள் - என்றார்.

## கைதிக்கு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கைதி போதைப்பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையமான கந்தக்காடு மத்திய நிலையத்தில் இருந்து கடந்த 27 ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டிருந்த நிலையில் தற்போது அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் கைதிகள், சிறைச்சாலை அதிகாரிகளும் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே வெலிசறை கடற்படை முகாமில் இருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவருக்குத் தொற்றிய கொரோனா சுமார் 800 இற்கு மேற்பட்ட கடற்படையினரைத் தாக்கியிருந்தது. அதே போன்று தற்போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதி ஒருவருக்கு தொற்று உறுதியாகியுள்ளமை அதுபோன்றதொரு குழுப் பரவலை ஏற்படுத்தும் அபாயம் இருப்பதாக அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உதிரியாகப் பிரிந்து நின்றால் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் -

2013ஆம் ஆண்டின் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் நான்கு கட்சிகளின் கூட்டமைப்பாக பெரும் வெற்றி கண்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. ஆனால் மாகாண சபையின் ஆட்சி காலம் முடியும்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி முழுமையாகக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. மேலும் நீதியரசர் விக்னேஸ்வரன்,அனந்தி சசிதரன், ஐங்கரநேசன் போன்றோர் தனிக்கட்சி ஆரம்பித்து கூட்டமைப்புக்கு எதிரான நிலையில் உள்ளனர். ரெலோ அமைப்பும் இரண்டாகப் பிரிந்து ஒரு பிரிவினர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டமைப்புடன் இணைந்து கொள்ள ரெலோ தலைமையினர் கூட்டமைப்புடன் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறு பிரிந்து நின்று உதிரிகளாகத் தேர்தலில் போட்டியிடுவதால் எமது பிரநிதித்துவப் பலம் சிதைவடையவே செய்யும்.

குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைக்கக்கூடிய தேசியப் பட்டியல் ஆசனம் தென் பகுதிக்குச் செல்லக்கூடிய அபாயம் தெளிவானது. மேலும் வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் கிடைக்கவேண்டிய நிதி ஒதுக்கீடுகளும் பறிபோகும்.

ஆகவே எமது மக்கள் சிரமம் பாராது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முழுமையாக வாக்களிப்பதன் மூலம் அதிகளவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவது மட்டுமன்றி தேசியப்பட்டியலில் இரண்டு பேருக்குக் கூடிய உறுப்பினர்களைத் தெரிவு செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்கவேண்டும்.

இந்தத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவரே யாழ்ப்பாண மாவட்ட முதன்மை வேட்பாளர். எனவே கட்சித் தலைவர் என்ற வகையில் அவர் வெற்றி பெறவேண்டியது அரசியல் ரீதியாக அவசியமானது.

எனவே நீங்கள் தேர்தலில் வாக்களிப்பின்போது வாக்குச் சீட்டில் மூன்றாவதாக இருக்கக்கூடிய வீட்டுச் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு கட்சிக்கான கூடிய ஆசனங்களை உறுதி செய்துகொண்டு மாவை சேனாதிராசாவின் விருப்பு வாக்குக்கும் புள்ளடியிட்டு அவரை அமோக வெற்றியடையச் செய்யும் அதே நேரம் உங்களுக்கு இருக்கும் ஏனைய இரண்டு விருப்புவாக்குகளையும் நீங்கள் விரும்பும் ஏனையவர்களுக்கு வழங்கலாம் - என்றார்.

இந்த மக்கள் சந்திப்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தின் முதன்மை வேட்பாளருமான மாவை சேனாதிராசா, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொருளாளர் பொ.கனகசபாபதி, வலிகாமம் வடக்கு பிரதேசபை தவிசாளர் எஸ்.சுகிர்தன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

## சிவில் பாதுகாப்பு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 3ஆம் திகதி பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி பகுதியில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அந்த வெடிப்பு சம்பவத்தை அடுத்து வெடிப்பு இடம்பெற்ற அவரது வீட்டில் பொலிஸார் மற்றும் படையினரினால் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது பிளாஸ்ரிக்கில் செய்யப்பட்ட குண்டு - 2, கரும்புலி நாள் போஸ்டர் - 1, போன் - 1, லப்ரொப் - 1, டொங்கிள் - 1, பென்ரைவ் - 1, சிடி - 1 ஆகியன மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்தவரின் மனைவியான பெண் ஆசிரியை ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

குற்றச் செயல் ஒன்றுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை மற்றும் தடயப் பொருள்களை அழிக்க முற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் ஆசிரியை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பில் தொடர் விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் நேற்று முன் தினம் இரவு கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் படையினரால் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் கமலகரன் (வயது - 40) மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் கிளிநொச்சி சிவில் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சருகுப்புலியிடம் சிக்கி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்துள்ளன.

இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சம்பந்தனின் அபத்தப் பேச்சு

தேர்தல் என்று வந்து விட்டால் எது குறித்தும் பேசலாம் என்பது பலரினதும் நினைப்பு.

நீண்ட கால அரசியல் அனுபவம் உள்ள - பழுத்த - அரசியல் வாதியான கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அப்படிப் பேசக் கூடாது; பேச முடியாது.

சிங்களத் தலைவர்கள் வரிசையில் அரசியல் தந்திரோபாய மதிநுட்பம் மிக்கவர் என்ற காரணத்தினாலும், வயது மூப்பினாலும் முன்னாள் ஜனாதிபதி கே.ஆர். ஜெயவர்த்தனாவை 'கிழட்டு நரி' என்று கூறுவார்கள். இலங்கை சுதந்திரம் பெற்ற போது, முதல் அமைச்சரவையில் இடம்பெற்ற அவர், முப்பது ஆண்டுகள் கழித்து ஆட்சி அதிகாரத்துக்கு வந்து, அடுத்த பன்னிரண்டு ஆண்டுகள் இரும்புப் பிடிக்குள் நாட்டைக் கட்டி ஆண்ட முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாவார்.

சுமார் நாற்பத்திரண்டு ஆண்டுகள் நாட்டின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் முக்கிய சக்தியாக விளங்கிய ஜே.ஆர். ஜெயவர்த்தனா போல, 1977 முதல் நாற்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு மேல் தமிழர் அரசியலில் பெரும் சக்தியாக ஆதிக்கம் செலுத்தி வருகின்றமையால் தமிழர் தரப்பில் இவரையும் 'கிழட்டு நரி' என்றே அழைக்கலாம்.

ஆனால் அவரது தேர்தல் காலப் பேச்சு - வாய் வீச்சு - அவரைத் தம்மைக் குறித்து 'கிழட்டுப் புலி' என எண்ண வைத்து விட்டதோ என்று நினைக்கத் தோன்றுகின்றது.

தம்பலகாமம் கோட்டத்தில் நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தில் அத்தகைய பேச்சு ஒன்றையே அவர் பேசியிருக்கின்றார்.

*"எமது சம்மதம் இன்றி எவரும் எம்மை ஆட்சி செய்ய முடியாது. புதிய ஆட்சியில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் சிந்தித்து வாக் களிக்க வேண்டும்"*

- இவ்வாறு அங்கு நடைபெற்ற கூட்டத்திலே சம்பந்தன் கூறியிருக்கின்றார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

தமிழர்களின் அண்மைய இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட சரித்திரத்திலே "எமது சம்மதம் இன்றி எம்மை எவரும் ஆட்சி செய்ய முடியாது" என்று கூறும் தகுதி படைத்தவராக ஒருவரே இருக்கின்றார். அவர் தமிழரின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மட்டுமே. அதுவே வரலாற்று உண்மை.

அப்படியில்லாவிட்டால், தலைவர் பிரபாகரனின் காலத்திலே அவருடன் வாழும் ஒரு தலைவர் அச்சமயம் அப்படிக் கூறியிருக்கலாம். கூறலாம்.

இன்று நிலைமை அப்படியல்ல. ஒருவேளை தன்னைத் தலைவர் பிரபாகரன் போல கற்பனை பண்ணிக் கொண்டு, அந்த எண்ணத்தில் வாழும் 'கிழட்டுப் புலி'யாகத் தம்மை நினைத்துக் கொண்டு சம்பந்தன் அப்படிக் கூறினாரோ என்னவோ?

எது எப்படியென்றாலும், இன்னமும் அப்படிக் கூறும் துணிச்சலில் - மனத் திமிரில் - தமிழர் தம் தலைவர் இருப்பது சிலாகிக்கத் தக்கதே.

ஆனாலும் தலைவர் பிரபாகரனின் காலம் கடந்த பின்னர், அப்படி ஒரு நிலைக்கு மீளவும் தமிழர்கள் உயருவார்களா என்பதே ஆவலும், எதிர்பார்ப்பும் மிக்க கேள்வியாகும்.

தமிழ்த் தேசியத்தின் மூன்றில் இரண்டு பங்கு நிலப்பரப்பையும், அதேயளவு கடற்பரப்பையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொண்டு, தனியான சட்டங்கள், நீதிமன்றங்களுடன் சமாந்தரமான ஓர் அரசைக் கொண்டு நடத்தியபடி, ஒரு தனியான நாட்டுக்குரிய நிர்வாகத்தை முன்னெடுத்த தலைவர் பிரபாகரனோ, அல்லது அவரது தரப்போ *'எமது சம்மதம் இன்றி எம்மை எவரும் ஆட்சி செய்ய முடியாது'* என்று கூறலாம். அத்தகைய சாதனையை நிரூபித்துக் காட்டியவர் அவர்.

அதே பேச்சை தேர்தல் உசுப்பேத்தலுக்குத் தன்னும் சம்பந்தர் பேசுவது பொருத்தமற்றதாகும்.

இனியும் ஆயுதம் தாங்கிப் போராடி, வன்முறை வழிகளை நாடி, மக்களுக்குத் தீர்வு பெற்றுத் தருவோம் என்று உசுப்பேத்தல் பேச்சுப் பேசுவது அர்த்தமற்றது,அபத்தமானது என்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கூறுவது எவ்வளவு உண்மையோ, எவ்வளவு தூரம் யதார்த்தமோ, எவ்வளவு தூரம் சரியானதோ, அது போன்றதுதான் *'எமது சம்மதம் இன்றி எம்மை எவரும் ஆட்சி செய்ய முடியாது'* என்ற சம்பந்தனின் வீறாப்புப் பேச்சும் அபத்தமானது, அர்த்தமற்றது என்று கூறுவதும் சரியானதாகும்.

பல்வேறு மட்டங்களில் உள்ள தமிழ் மக்களின் தேசிய உணர்வெழுச்சியைத் தட்டி எழுப்பி, தனித்தனி உதிரிகளாக வேறுபட்டு, முரண்பட்டு, நின்ற பல்வேறு வர்க்கத்தினரையும், சாதியினரையும் அணி திரட்டி, அறுபதுகளில் பெரும் வெகுசனப் போராட்டமாகக் களமிறக்கியது தந்தை செல்வாவின் தலைமையிலான தமிழரசுக் கட்சி.

அத்தகைய பேரெழுச்சி நிலையைத் தமிழர் தரப்பில் ஏற்படுத்தி விட்டு சம்பந்தன் இப்படிக் கூறியிருந்தாலாவது அதில் ஏதும் நியாயம் இருந்திருக்கின்றது என ஏற்கலாம்.

தமிழர் தரப்புகளைப் பிளந்து, சின்னாபின்னமாக்கும் ஒரு தலைமைத்துவம்தான் அவரது பெறுபேறு. அதற்கு மத்தியில் இத்தகைய பேச்சு வெறும் அபத்தம்தான்.

## வாக்களிப்பதற்காகத் தேசிய அடையாள அட்டையை உடன் பெற்றுக் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜுலை07

தேசிய அடையாள அட்டை இல்லாத வாக்காளர்கள் தமக்குரிய தேசிய அடையாள அட்டை விண்ணப்பத்தினை கிராம சேவையாளர் ஊடாக உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கு தேர்தல் விதி முறைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் கூட்டத்தின் பின் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தமுறை நாடாளுமன்ற தேர்தலில் 2019 ஆம் ஆண்டுக்குரிய தேர்தல் இடாப்பு பயன்படுத்தப்பட உள்ளது. 2019 தேர்தல் டாப்பில் பெயர் உள்ளவர்கள் இந்த முறை தேர்தலில் வாக்களிப்பதற்கு உரிமை உள்ளவர்கள்.

அதேபோல் தேர்தலில் வாக்களிப்பதற்கு சமுகமளிக்கும் ஒருவர் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆள் அடையாளத்தை சமர்ப்பித்து வாக்களிப்பை மேற்கொள்ள முடியும். பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆள் அடையாளமாக அடையாள அட்டை, வாகன சாரதி அனுமதிப் பத்திரம், கடவுச்சீட்டு மற்றும் ஆள்பதிவுத் திணைக்களத்தினால் மதகுருமாருக்கு என வழங்கப்பட்ட அடையாள அட்டை , சமூக சேவை திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற முதியோர் அடையாள அட்டை போன்றவை ஏற்றுக்கொள்ளப்படும்

இத்தகைய எந்த ஓர் ஆவணமுமில்லாத ஒருவர் தற்காலிகமாக தேர்தல் திணைக்களத்தினால் அடையாள அட்டையை பயன்படுத்தி வாக்களிக்க முடியும்

ஜுலை மாதம் 17 ஆம் திகதி வரைக்கும் ஆள்பதிவுத் திணைக்களத்தினுடைய தரவுத் தளத்திலுள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக உட்சேர்க்கப்பட்ட சகல தேசிய அடையாள அட்டை விண்ணப்பதாரர்களுக்கும் அடையாள அட்டையினைத் தேர்தலுக்கு முன்னர் விநியோகிப்பதற்குரிய விசேட நடவடிக்கையை ஆள்பதிவுத் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

அதேபோல 2020 ஜுலை மாதம் 29ஆம் திகதி வரைக்கும் ஆள்பதிவுத் திணைக்கள தரவுத்தளத்தில் உட்சேர்க்கப்படுகின்ற தகவல்களைக் கொண்டு உறுதிப்படுத்திய கடிதத்தினை தேர்தலுக்கு முன்னர் விநியோகிப்பதற்கும் ஆள்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது

எனவே தேசிய அடையாள அட்டை இல்லாத அனைத்து வாக்காளர்களும் எதிர்வரும் ஜுலை 29 ஆம் திகதிக்கு முன்னர் தங்களுக்குரிய அடையாள அட்டைக்குரிய விண்ணப்பத்தினை ஆள்பதிவுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து தங்களுக்குரிய ஆள் அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்ளமுடியும். இது தொடர்பில் சகல கிராம சேவையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் இலகுவாக வாக்காளர்கள் வாக்களிப்பினை மேற்கொள்ள நாம் வசதி செய்கின்றோம் எனவும் உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

உதவிப் பிரதேச செயலர்கள் மற்றும் கிராம சேவையாளர்களுக்கு தேர்தல் தொடர்பில் விளக்கமளிக்கும் இந்தக் கூட்டம் யாழ். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் க.மகேசன் தலைமையில் யாழ் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது

சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை, உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர்களுக்கு தேர்தல் விதிமுறைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டமே இன்றைய தினம் இடம்பெற்றது

தேர்தலில் வாக்காளர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் கிராம சேவையாளர் பிரிவில் தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்றவை உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது

யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் மற்றும் உதவி அரசாங்க அதிபர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டு கிராமசேவையாளர்களுக்கு தேர்தல் விதிமுறை தொடர்பில் விளக்கமளித்தனர்.

## நாடு முழுவதும் ஒரே மாதிரியாக பாடசாலைகளை நடத்துங்கள்!

### தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

பாடசாலைகளை நடாத்துதல் தொடர்பாக நாடு முழுவதும் ஒரே நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது

மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்குப் பங்கம் ஏற்படாதவகையில் பாடசாலைகள் முகாமை செய்யப்பட வேண்டும்.

ஆசிரியர்கள் வழமையான கைவிரல் அடையாளமிடுதல், 7.30இல் இருந்து 3.30 வரை பாடசாலையில் இருத்தல் என்பன மத்திய கல்வி அமைச்சினால் கட்டாயமாக்கப் படவில்லை.

இதனை கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெளிவாக அறிவித்துள்ளார்.

இதனை வடக்கு மாகாணமும் பின்பற்ற வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடமாமாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் எடுத்துரைத்துரைத்த போது வடக்கு மாகாணத்திலும் அதே சுற்றுநிருபமே நடைமுறையில் உள்ளதெனவும் சில அதிபர்களே அதனை உதாசீனம் செய்து நடந்து கொள்கின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார். அவ்வாறு நடந்துகொள்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறியுள்ளார் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.

## மின் கட்டணத்தைச் செலுத்துவதற்கு விகிதாசார சலுகை வழங்க யோசனை

கொழும்பு, ஜுலை 08

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மின் கட்டணத்தை செலுத்துவதற்காக விகிதாசார அடிப்படையில் சலுகை வழங்குவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பரிந்துரைகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையின் அடிப்படையில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஏனைய தரப்பினர் தொடர்பிலும் பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டதாக மின் சக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையை ஆராய்ந்த பின்னர், அமைச்சரவை அனுமதிக்காக நாளை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மின் கட்டணத்தை செலுத்துவதற்காக வழங்கப்படும் சலுகை தொடர்பில் இவ் வாரம் அறிவிக்கப்படும் என இலங்கை மின்சார சபையின் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

# எல்லையில் இந்திய விமானங்கள் கடும் கண்காணிப்பு நடவடிக்கை!



இந்தியா – சீனா எல்லையில் நேற்று இரவு இந்திய விமானப் படை விமானங்கள் கண்காணிப்புப் பணியில் அதிக நேரம் ஈடுபட்டன. எல்லைப் பதற்றத்தைத் தணிக்கும் வகையில் இவ்விரு நாடுகளின் இராணுவ உயர்மட்டத்தில் பேச்சுகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் நேற்றைய தினம் எல்லையிலிருந்து சீனா பின்வாங்கியது. அங்கிருந்த அதன் பின்னர் இந்தியாவும் எல்லையிலிருந்த தனது படைகளைப் பின்வாங்கச் செய்தது. எல்லையில் இரு சாராரும் தற்காலிகமாக அமைத்த கட்டுமாணங்களும் அகற்றப்பட்டன.

இந்த நிலையிலேயே லடாக் எல்லையில் தொடர்ந்து விமானக் கண்காணிப்பை இந்தியா அதிகப்படுத்தியுள்ளது. நேற்று இரவு நீண்ட நேரமாக இவற்றின் கண்காணிப்புப் பணி தொடர்ந்தது. மிக் – 29, சுகோய் 30 எம்.கே.ஐ. அப்பாச்சி தாக்குதல் ரக விமானங்களே இந்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

எல்லை முரண்பாடு

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே நீண்ட காலமாக எல்லையில் முரண்பாடு இருந்து வருகிறது. கிழக்கு லடாக் எல்லைப் பகுதியில் அண்மையில் இரு தரப்பினருக்கும் இடையே கைகலப்பு நடந்தது. இந்தியச் சிப்பாய்கள் 20பேர் கொல்லப்பட்டனர். 50க்கு மேற்பட்டவர்கள் காயம் அடைந்தார்கள். சீன தரப்பு இழப்புகள் குறித்துச் சீனா எதுவும் தெரிவிக்கவில்லை.

தமது பக்கத் தில் இறந்த சிப்பாய்களின் இரண்டு மடங்கு சிப்பாய்கள் சீனா சார்பில் இறந்திருப்பார்கள் என்று இந்தியத் தரப்பு ஊகம் தெரிவிக்கிறது.

இந்த எல்லை மோதலைத் தொடர்ந்து எல்லையில் இவ்விரு நாடுகளும் படைகளைக் குவித்தன. இராணுவப் பேச்சுகளுக்கு இடையே படைகள் தற்போது விலகியுள்ளன. இந்த நிலையிலேயே இந்திய இராணுவம் அங்கு கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளது.



# எல்லை இராணுவத்தினருக்கு குளிரைத் தாங்கும் கூடாரங்கள்

இந்திய – சீன எல்லை மோதலைத் தொடர்ந்து இந்தியச் சிப்பாய்கள் எல்லையிலிருந்து அகற்றப்பட்டாலும் அதை அண்மித்த பகுதிகளில் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். கிழக்கு லடாக் பகுதியில் தற்போது கடும் குளிர் நிலவுகிறது.

எனவே கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள உண்மையான கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டு பகுதியில் முகாமிட்டுள்ள இந்தியச் சிப்பாய்களுக்குக் குளிரைத் தாங்கும் வகையிலான கூடாரங்கள் தேவை என்று கருதி அவர்களுக்கு அவ்வகைக் கூடாரங்களை வழங்குவதற்கு உத்தரவிடப்பட்டது.

கடும் குளிரைத் தாங்கும் சக்தி படைத்த கூடாரங்களை உடனே தயாரித்து வழங்குமாறு இந்தியப் பாதுகாப்பு அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்போது எல்லைப் பகுதியில் 30 ஆயிரம் சிப்பாய்கள் குவிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பெருவெள்ளம் ஏற்படலாம் சென்னைக்கு எச்சரிக்கை!

சென்னையில் 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருமழையை விடப் பல மடங்கு அதிகமான மழைப் பொழிவு எதிர்வரும் காலங்களில் ஏற்படலாம் என்று சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சென்னை, மும்பை, திருவனந்தபுரம், விசாகப்பட்டினம் உள்ளிட்ட இந்தியாவின் கடலோர நகரங்களில் பருவ நிலை மாற்றம் ஏற்படுத்தும் தாக்கம் குறித்தும் அதில் இருந்து மீள்வதற்கான வழிகள் குறித்தும் ஆராய்வதற்கான இந்திய அரசின் சிறப்பு திட்டமொன்றின் கீழ், 2015ஆம் ஆண்டு சென்னை பெருவெள்ளத்தில் பருவநிலை மாற்றத்தின் தாக்கம் குறித்தும் அது எதிர்காலத்தில் ஏற்படுத்தக் கூடிய தாக்கங்கள் தொடர்பாகவும் இந்த ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

அதில், சென்னையைப் பொறுத்தவரை வரும் காலங்களில் மழைப்பொழிவு முன்னெடுப்போதுமில்லாத அளவுக்கு அதிகரிக்கக் கூடும் என்றும், இது 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட சென்னை பெருவெள்ளத்தை விட பல மடங்கு பேரிழப்பை ஏற்படுத்தக் கூடும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு சென்னையில் ஏற்பட்ட பெருவெள்ளம் குறித்த தரவுகளை அடிப்படையாக கொண்டு அது போன்ற நிகழ்வுகள் எதிர்காலத்தில் ஏற்படுமா? அப்படி ஏற்பட்டால் அதன் தாக்கம் என்னவாக இருக்கும் என்பதை நவீன கனிணிகளைக் கொண்டு ஆய்வு செய்ததில் இது தெரிய வந்துள்ளது என்று இதுகுறித்து மேலும் கூறுகிறார் இந்த ஆய்வை மேற்கொண்ட ஆய்வாளர்களில் ஒருவரான பேராசிரியர் பாலாஜி. 2035, 2055, 2075 உள்ளிட்ட ஒவ்வொரு இருபதாண்டு கால இடைவெளியிலும் சென்னையில் மழைப்பொழிவு அதிகரிக்கும் என்று அந்த ஆய்வில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# குவைத்தின் புதிய சட்டத்தால் இந்தியர்கள் வேலை இழப்பு



புலம்பெயர்ந்தோர் தொடர்பாகக் குவைத்தில் இயற்றப்பட்டுள்ள புதிய சட்டத்தால் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் நூற்றுக்கணக்கான இந்தியப் பொறியியலாளர்கள் வேலை இழக்க நேரிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:–

குவைத் தேசிய சவையின் சட்ட மறுஆய்வுக் குழு, புலம்பெயர்ந்தோர் குறித்துத் தயாரிக்கப்படும் புதிய தீர்மானத்தைச் சட்டபூர்வமானதாக ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த முன்மொழிவு உயர் குழுக்களின் அனுமதிக்கு அனுப்பப்படஉள்ளது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த சட்டத்தின் வரைவு, குவைத்தில் வாழும் இந்தியர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்று கூறுகிறது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அங்கு வசிக்கும் சுமார் 10 லட்சம் இந்தியர்களில், எட்டு அல்லது எட்டரை லட்சம் பேர் வேலை இழப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2008 ஆம் ஆண்டின் பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து வெளிநாட்டவர் சட்டம் போன்ற விதிமாற்றங்கள் குவைத்தில் அடிக்கடி நிகழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பாரதிதாசனின் மகன் மரணம்!

புரட்சிக் கவிஞர் என்று சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்ற பாரதிதாசனின் மகன், மன்னர்மன்னன் உடல்நலக்குறைவால் திங்கட்கிழமை காலமானார். காலமான அவருக்கு வயது 92. வயோதிபத்தால் ஏற்பட்ட உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் காலமானார். பேச்சாளர், எழுத்தாளர், தமிழறிஞரான இவர் 50க்கும்மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.



பல்வேறு நாடகங்களைத் தயாரித்துள்ளார். புதுவைத் தமிழ்ச்சங்கத்தில் தலைவராக இருந்துள்ள இவர், தமிழ்ச்சங்கத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டி வழங்கிய பெருமைக்குரியவர்.

தமிழக அரசின் உயரிய விருதுகளான திரு.வி.க விருது, கலைமாமணி விருது, புதுச்சேரி அரசின் தமிழ்மாமணி, கலைமாமணி விருது உள்ளிட்ட பல விருதுகள் பெற்றவர். அவரது தந்தை 'புரட்சிக் கவிஞர்' பாரதிதாசன் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சுஷாந்த் சிங்கைப் பாராட்டிய ரகுமான்!





ஏ.ஆர். ரஹ்மானின் இசையமைப்பில் சுஷாந்த் சிங் நடித்த தில் பேச்சாரா என்ற ஹிந்திப் படத்தின் ட்ரெய்லர் இன்று வெளியாகியது. ஜான் கிரீன் எழுதிய தி ஃபால்ட் இன் அவர் ஸ்டார்ஸ் என்கிற நாவலை மையமாகக் கொண்டு தில் பேச்சாரா இந்தப் படம் உருவாக்கப்பட்டுள்ளது. ட்ரெய்லர் வெளியாகிய சில மணி நேரங்களில் ஏறத்தாழ ஐந்து லட்சம் பேர் அதைப் பார்த்தனர். இந்தக் காதல் கதையைக் கொண்டாடுங்கள்,' என்று இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் கீச்சகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# சித்த மருத்துவப் பொடியை சோதனை செய்ய உத்தரவு

கொரோனா வைரஸ் தடுப்பதற்காகத் தமிழகத்தில் உருவாக்கப்பட்ட இம்ப்ரோ சித்த மருத்துவப் பொடியைப் பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இந்திய ஆயுஷ் அமைச்சகத்துக்கு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை உத்தரவிட்டது.

அரச சித்த மருத்துவக் கல்லூரியில் பணிபுரியும் சித்த மருத்துவர் சுப்பிரமணியன் தொடர்ந்த வழக்கில், அவர் உருவாக்கியுள்ள இந்தப் பொடியில் 66 வித மான மூலிகைகள் உள்ளதாகவும், இந்தப் பொடியை உட்கொண்டால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் என் மருந்தாகச் செயற்படும் எனவும் தெரிவித்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், சுப்பிரமணியனின் 30 ஆண்டு கால மருத்துவ அனுபவத்தைக் கருத்தில் கொண்டு அவரின் மருந்தை சோதனை செய்து பார்க்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இந்த மருத்துவம் பெரிய வியாபாரமாக வாய்ப்புள்ளதால் சித்த மருந்துகளை ஆராய்ச்சி செய்யும்போது போதுமான கவனம் கொடுக்கப்படவேண்டும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

கல்லீரலை பாதிக்கும் ஹெப்பாடிட்டீஸ் பி நோய்க்



மாத்திரை தயாரிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டிய நீதிபதிகள், இத்தகைய மருத்துவ முறைகளுக்கு அரசு முக்கியத்துவம் அளித்தால், சாதரண மக்களின் மருத்துவ

# பன்னாட்டு நீதிமன்றத்தை நாடும் உய்குர் முஸ்லிம்கள்

சீனாவிலுள்ள உய்குர் முஸ்லிம்கள் சீனாவில் தங்களுக்கு எதிராக நடடக்கின்ற அடக்குமுறைகள் குறித்து விசாரிக்குமாறு பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தை நாடியுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. சீனாவின் கொம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிரான முதல் முயற்சி இது என்று அமெரிக்க ஊடகங்கள் குறிப்பிட்டன. இது தொடர்பாகப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் உய்குர் முஸ்லிம் குழுக்கள் 2 வழக்குப் பதிவு செய்துள்ளன. இந்த உய்குர் முஸ்லிம்கள் செயற்பாட்டுக் குழுசாா்பில்லண்டன்வழக்கறிஞர்கள்வாதாடவிருக்கிறாா்கள் என்று இவ்விரு ஊடகங்களும் தெரிவிக்கின்றன. இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக முஸ்லிம்கள் முன்வைத்த குற்ற அறிக்கையில் சீன அதிபர் ஜி ஜின்பிங் உட்பட 30 சீன




அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மூன்று வாரங்களாக உயிரிழப்புகள் இல்லை!

மலேசியாவில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கடந்த 3 வாரங்களாக அங்கு கொரோனாவுடன் தொடர்புள்ள உயிரிழப்புகள் ஏதும் பதிவாகவில்லை. இத்தகவலை மலேசிய சுகாதார அமைச்சின் பொது ஆணையர் டாக்டர் நூர் ஹிாம் அப்துல்லா தெரிவித்தார். மலேசியாவில் கொரோனாவைரஸ்தொற்றால்பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 8,668 ஆகும். இவர்களில் இதுவரை 8,476 பேர் குணமடைந்துள்ளனர். சாவு எண்ணிக்கை 121ஆக இருக்கிறது. இந்த நிலையிலேயே கடந்த 22 நாட்களாக நோய்த்தாக்கம் உள்ள எவரும் உயிரிழக்கவில்லை. கொரோனா வைரஸ் தொற்றை மலேசியாவும் வெற்றிகரமாக சமாளித்துள்ளது,' என்று டாக்டர் நூர் ஹிாம் தெரிவித்தார்.

## நீண்டகாலம் வாழ்ந்த இரட்டையர்கள் சாவு!



உடலால் ஒட்டிப்பிறந்த நீண்டகாலங்களாக வாழ்ந்து வந்த இரட்டைச் சகோதரர்கள் கடந்த 4ஆம் திகதி உயிரிழந்தனர்.

உயிரிழக்கும்போது அவர்களுக்கு வயது 68. அமெரிக்காவின் ஓஹியோ மாநிலத்தில் உள்ள பீவர் கிரீக் எனும் இடத்தில் 1951ஆம் ஆண்டு ஒக்டோபர் 28ஆம் திகதி பிறந்த இவர்களின் வயிற்றுப்பகுதிகள் பிறந்ததில் இருந்தே ஒட்டி இருந்தன. அறுவைச் சிகிச்சை மூலம் பிரித்தால் இரண்டில் ஒருவர் இறக்க நேரிடும் என்பதால், அவர்கள் பிரிக்கப்படவில்லை என்று மருத்துவத் தரப்பினர் தெரிவித்தனர்.

ஒட்டிய உடல்களுடன் 68 ஆண்டுகள் வரை உயிர் வாழ்ந்த ரோனி, டோனி கால்யன் என்ற இரண்டு சகோதரர்களுமே தற்போது உயிரிழந்தவர்களாவர். உலகிலேயே நீண்டகாலம் உடலால் ஒட்டி வாழ்ந்த இரட்டைச் சகோதரர்கள் எனும் பெருமையைத் தங்களின் 63ஆவது பிறந்தநாளன்று 2014ஆம் ஆண்டில் கொண்டாடினார்கள். தற்போது அவர்கள் இறந்துள்ளனர்.

### வாழ்க்கை

ரோனி, டோனி கால்யான் இருவரும் தாங்கள் வளர்ந்தபின் வாழ்வாதாரத்துக்காக மாயாஜாலம் செய்வதும், திருவிழாக்கள், பண்டிகைகளில் வலம் வந்து, மக்களை ஈர்த்தும் பணம் ஈட்டினர். இருவரின் வருமானத்தால்தான் நீண்டகாலம் குடும்பத்தை நடந்த முடிந்தது என்று இருவரின் மற்றொரு சகோதரர் ஜிம் கால்யான் தெரிவித்தார்.

கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்பதிலிருந்து 1991 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றனர். 2010ஆம் ஆண்டு வரை டேட்டன் நகரில் வசித்து வந்தனர். டேட்டன் நகரில் உள்ள மக்கள் இருவரின் நிலையை அறிந்து நிதிதிரட்டி, வீட்டை புத்தாக்கம் செய்து, தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தனர். இரட்டை சகோதர்கள் இருவரும் வெளியே சென்று வருவதற்காக பிரத்தியேகமாக ஒரு சக்கர வாகனத்தையும் உருவாக்கிக் கொடுத்தனர். இந்த நிலையிலேயே முதுமை காரணமாக அவர்கள் உயிரிழந்தனர்.

**தென் கொரியாவின் தலைநகர் சியோலில் உள்ள ஹான் ஆற்றங்கரைக்கு மேல், முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியைப் பின்பற்றுமாறு விழிப்புணர்வூட்டும் வகையில் ட்ரோன்கள் வெளிச்சமூட்டிப் பறந்த நிலையிலுள்ளன.**



## இந்தோனேசியாவில் பெரும் நிலநடுக்கம்

இந்தோனேசியாவில் இன்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 6.3 ஆகப் பதிவாகியது. இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:

இந்தோனேசியாவின் வடக்கில் 142 கிலோ மீற்றர் தொலைவில் சிமாராங் பகுதியில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தின் மையம் கடலுக்கடியில் 578 கிலோ மீற்றர்கள் ஆழத்தில் உணரப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்துத் தகவல் ஏதும் இதுவரை வெளியாகவில்லை.

சுனாமி எச்சரிக்கையும் உடனடியாக விடுக்கப்படவில்லை. 2004 ஆம் ஆண்டில் இந்தோனேசியாவிலுள்ள சுமத்ரா தீவில் 9.3 என்ற ரிக்டர் அளவில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் சுனாமி அலை உருவாகி உயிரிழப்புகளும், பெரும் சேதங்களும் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அணு உலையில் தீ விபத்து இஸ்ரேல் மீது குற்றச்சாட்டு



ஈரானின் அணு ஆயுதத் தயாரிப்பு ஆலை மீஶ்ரீது இஸ்ரேல் குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளது என்று ஈரான் குற்றம் சுமத்தியுள்ளது. ஈரானின் நாதன்ஸ் நகரில் கட்டப்பட்டு வரும் அணு ஆலையில் கடந்த வியாழக்கிழமை பெரும் தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தீ விபத்தில் உயிர் இழப்போ அல்லது யாருக்கும் காயமோ ஏற்படவில்லை.

ஆனால், அங்கு புதிதாக நிறுவப்பட்டிருந்த விலை உயர்ந்த மற்றும் உயர் தொழில்நுட்பம் கொண்ட உற்பத்தி சாதனங்கள் பல தீயில் கருகின. இந்த விபத்துக் குறித்து ஈரான் அணுசக்தி அமைப்பின் செய்தித் தொடர்பாளர் பெஹ்ரூஸ் கமல்வாண்டி பத்திரிகையாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவித்த போதே இஸ்ரேல் மீது குற்றம் சுமத்தினார்.

இந்தத் தீ விபத்து ஈரானின் செறிவூட்டல் பணிகளுக்குத் தடையாக இருக்கவில்லை. எனினும் இது மேம்பட்ட இயந்திரங்களின் வளர்ச்சி மற்றும் உற்பத்தியை மந்தமாக்கும். ஆனாலும் இந்த மந்த நிலையை எங்கள் சகாக்களின் விடா முயற்சி மூலம் ஈடு செய்வோம்.

இது விபத்து அல்ல. இஸ்ரேலால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் என்று ஈரானின் உளவு அமைப்பு தெரிவித்துள்ளது என் றார். இவ்வாறிருக்க ஈரானின் இந்தக் குற்றச்சாட்டை இஸ்ரேல் மறுத்துள்ளது. ஈரானில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் இஸ்ரேல் காரணமாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்று இஸ்ரேலின் இராணுவ அமைச்சர் பென்னி கான்ட்ஸ் கூறினார்.

அமெரிக்கா உள்ளிட்ட 6 வல்லரசு நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே கடந்த 2015ம் ஆண்டில் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது. ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே முரண்பாடு நீடித்து வருவதும் இஸ்ரேல் அமெரிக்காவின் நல்ல நட்பு நாடு என்பதும் குறிப்பிடத்தக்கன.

# அமெரிக்காவை அச்சுறுத்துகிறது அமீபா!

மனித மூளையைத் தின்னும் மிக அரிய வகை அமீபாவால் அமெரிக்காவில் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளார் என அமெரிக்காவின் புளாரிடா மாகாணச் சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நெக்லேரியா ஃபௌலேரி என்ற இந்த மிக நுண்ணிய அமீபாவால் ஹில்ஸ்பாரோ கவுன்டியில் உள்ள ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

மூக்கு வழியாகத் தண்ணீர் மூலம் உடலில் நுழையும் இந்த மிக நுண்ணிய அமீபா ஒரு செல்லை மட்டுமே உடையது. இந்த அமீபா மூளையில் தொற்றை உண்டாக்கினால், உயிரிழப்பு ஏற்படும் வாய்ப்புள்ளது.

நன்னீரில் காணப்படும் இது மனிதர்களிடம் இருந்து மனிதர்களுக்குப் பரவாது. புளோரிடாவில் 1962ஆம் ஆண்டில் இருந்து 37 பேர் இந்த அமீபாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அமீபாவின் ஆபத்துகளைக் கருத்தில் கொண்டு, ஹில்ஸ்பாரோ கவுன்டி மக்களுக்கு புளோரிடா மாகாண சுகாதாரத்துறை ஜுலை மாதம் 3ஆம் திகதி எச்சரிக்கை விடுத்தது. குழாய் தண்ணீர் அல்லது வேறு எந்தத் தண்ணீராக இருந்தாலும் மூக்கில் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என ஹில்ஸ்பாரோ மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வகை அமீபாவால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பெரும்பாலும் காய்ச்சல், தலைவலி, குமட்டல், வாந்தி, கழுத்தில் இறுக்கம் உள்ளிட்ட அறிகுறிகள் இருக்கும். பெரும்பாலும் இந்த அமீபாவால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு வாரத்தில் உயிரிழந்துவிடுவார்கள். எனவே



இவ்வாறான அறிகுறிகள் இருப்பவர்கள் உடனே மருத்துவமனையை அணுக வேண்டும் என்று புளோரிடாவின் சுகாதாரத்துறை அதிகாரிகள் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

# பல்கலை மாணவர்கள் போதனை; ஆரம்பிப்பதற்கான நிபந்தனைகள்

அனைத்து பல்கலைக்கழகங்களினதும் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான திகதியை தீர்மானிக்கும் பொறுப்பு பல்கலைக்கழகங்களின் உப வேந்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் கருத்துத் தெரிவித்தார்.

அதற்கேற்ப, 11 நிபந்தனைகளுடன் இன்று முதல் பல்கலைக்கழக கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும்

1. ஒரு பீடத்தில் ஒரே தடவையில் இரண்டு வருட மாணவர்களை மாத்திரம் அழைத்தல்.

இறுதி வருட மற்றும் மூன்றாம் வருட மாணவர்களை ஒரே தடவையில் அழைப்பது பொருத்தமாகும்.

2. விடுதியில் தங்கியிருப்பவர்களுக்கு ஒரு மாணவருக்கு ஓர் அறை என்ற விகிதத்தில் வழங்குதல் கட்டாயமானது.

3. பலக்லைக்கழக மீள் ஆரம்பத்தின் போது, விரிவுரை மற்றும் பிரயோகங்கள் தொடர்பான வகுப்புகள் முடிக்கப்பட்டு நேரடியாக பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

4. பரீட்சைக்கு முன்னரான எந்த கல்வி நடடிவக்கைகளும் நான்கு வாரங்களுக்கு மேற்படக் கூடாது.

5. இறுதி வருட மருத்துவ பீட மாணவர்களுக்கு பயிற்சியை ஆரம்பிக்க முடியும். அதற்கான அனுமதியை குறித்த பீடங்கள் மேற்கொள்ளும்.

6. பல் வைத்தியம் மற்றும் ஆயுள்வேத மருத்துவம் ஆகியவற்றின் இறுதி வருட மாணவர்களின் பயிற்சியை ஆரம்பிக்க முடியும்.

7. கற்றல் நடவடிக்கைகள் முடிந்த கையோடு மாணவர்கள் வீடுகளுக்கு மீளச் செல்ல வேண்டும்.

8. பல்கலைக்கழக வளாகம், மாலை 7 மணிக்குப் பின்னர் எந்தக் காரணத்திற்காகவும் திறக்கப்படமாட்டாது.

9. விளையாட்டு, சமூக வேலைகள், மற்றும் ஏதேனும் ஒன்று சேரல் முதலானவற்றுக்கு அனுமதியில்லை.

10. பலக்லைக்கழகத்தை நடத்திச் செல்லுவதற்கு தேவையான கல்வி சார், கல்வி சாரா ஊழியர்களின் பங்கேற்பைப் பெற்றுக் கொள்வது உபவேந்தர்களின் தீர்மானமாகும்.

11. எனினும், பல்கலைக்கழகங்களின் முதலாம் வருட மாணவர்களின் கற்றல் நடடிவக்கைகளை ஆரம்பிப்பதற்கான தீர்மானம் இன்னமும் எட்டப்படவில்லை.

- இத்தகவல்களைப் பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

## உயர்தர பரீட்சை குறித்து வெள்ளியன்று தீர்மானம்

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை குறித்த தீர்மானம் எதிர்வரும் 10ஆம் திகதி (வெள்ளியன்று) மேற்கொள்ளப்படும் எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை செப்டம்பர் 7ஆம் திகதி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை மேலும் பிற்போடுவதாகக் கூறப்படும் செய்தி தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்-

2020 கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை 7ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கடந்த மாதம் அறிவித்தோம்.

எனினும் குறித்த தினத்தில் பரீட்சையை நடத்தாமல் சிறிது காலத்துக்குப் பிற்போடுமாறு ஒருசிலர் கேட்டிருக்கின்றனர்.

அதேபோன்று அரசாங்கம் அறிவித்த திகதிக்கே பரீட்சையை நடத்த நடவடிக்கை எடுக்குமாறும் சிலர் தெரிவித்திருக்கின்றனர்.

இந்நிலையில், கொழும்பு மற்றும் வெளிப்பிரதேச மாணவர்களிடமும் அவர்களின் பெற்றோர்களிடமும் இதுதொடர்பாக ஆலோசனைகளை பெற்றுக் கொண்டு, பரீட்சையை நடத்துவது தொர்பாக இறுதி தீர்மானத்தை எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை அறிவிப்போம் என மேலும் தெரிவித்தார்.

## ஐக்கிய மக்கள் சக்தியினது தலைமையை கைப்பற்ற சம்பிக்க கடுமையான முயற்சி

### இப்படிக் குற்றஞ்சாட்டுகின்றார் ரவி



முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் பல முறைகேடுகள், சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்த விடயங்களை அம்பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சம்பிக்க ரணவக்க நல்லாட்சி அரசில் அமைச்சராக இருந்த வேளையிலும், ஏனைய அரசுகளின் அமைச்சரவையில் இருந்த வேளையிலும் இடம்பெற்ற பல முறைகேடுகள் குறித்த விவரங்கள் என்னிடம் உள்ளன.

மூடிமறைக்கப்பட்ட பல முறைகேடுகள் குறித்த விவரங்கள் வெளியாகியுள்ளன. அவற்றை மூடிமறைப்பதற்காக சம்பிக்க ரணவக்க ஆட்சிகளையும், கட்சிகளையும் மாற்றினார்.

முன்னர் மஹிந்த ராஜபக்ஷ அரசில் அமைச்சராக இருந்த சம்பிக்க ரணவக்க பின்னர் மைத்திரிபால சிறிசேன அரசில் இணைந்ததன் மூலம் தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளை முடக்கினார்.

அதன் பின்னர் அவர் மைத்திரிபால சிறிசேனவுக்குத் துரோகமிழைத்த பின்னர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்தார். இதுவும் அவரின் சந்தர்ப்பவாத முயற்சியே ஆகும்.

அதன்பின்னர் அவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் துரோகமிழைத்துவிட்டு ஐக்கிய மக்கள் சக்தியில் சம்பிக்க ரணவக்க இணைந்தார். தற்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு துரோகமிழைத்துவிட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையை கைப்பற்றுவதற்கு சம்பிக்க ரணவக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

தனது முறைகேடுகளை, ஊழல்களை மறைப்பதற்கு சம்பிக்க ரணவக்க தனது விசுவாசங்களை மாற்றிக்கொண்டிருந்துள்ளார். எனினும் இதற்கு மேல் அவர் இதனைத் தொடர அனுமதிக்கப்போவதில்லை. அவரின் முறைகேடுகள் அனைத்தும் பகிரங்கப்படுத்தப்படும் - என்றார்.

## கெஸ்பாவவில் கொலை

கெஸ்பாவ பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் உரிமையாளர் குறித்த ஹோட்டலினுள் கொலை செய்யப்பட்டுள்ளார். இன்றுஅதிகாலை 4 மணியளவில் இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் 50 வயதுடைய கெஸ்பாவ பகுதியை சேர்ந்த ஒருவரே உயிரிழந்துள்ளார். இவர் தலையின் பின் பகுதியில் காயத்துடன் கட்டிலின் மேல் கிடந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த நபரின் மனைவியும் காயங்களுக்கு உள்ளாகி களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சவூதி, கட்டாரில் இருந்து 280 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜூலை 08

சவூதி அரேபியா மற்றும் கத்தாரிலிருந்து 280 இலங்கையர்கள் இன்று நாடு திரும்பியுள்ளனர்.

சவூதி அரேபியாவின் ரியாத்திலிருந்து 275 பேர் இன்றுகாலை 7.10 மணியளவில் நாட்டைவந்தடைந்தனர் எனக் கட்டுநாயக்க விமான நிலையத்தின் கடமை நேர முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், கட்டாரிலிருந்து 5 இலங்கையர்களும் இன்று காலை நாடு திரும்பியுள்ளனர்.

இன்று நாடு திரும்பிய அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், கொரோனாவினால் பிலிப்பீன்ஸில் சிக்கியிருந்த 41 இலங்கையர்கள் நேற்றிரவு நாடு திரும்பினர். இதேவேளை, சவூதி அரேபியாவிலிருந்து மேலும் 281 இலங்கை பிரஜைகள் இன்று இரவு நாட்டை வந்தடையவுள்ளனர்.

## செய்தியை அடுத்து சுவரொட்டிகள் அகற்றப்பட்டு பூசப்பட்டது வர்ணம்

யாழ்ப்பாணம், ஜூலை 07

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரான, யாழ்ப்பாணம் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியின் ஆசிரியர் ஒருவரின் தேர்தல் பிரசாரச் சுவரொட்டிகள் அந்தப் பாடசாலை மதில்களில் ஒட்டப்பட்டிருந்தமை தொடர்பில் நேற்றைய காலைக்கதிரின் 12 ஆம் பக்கத்தில் செய்தி ஒன்று வெளியாகி இருந்தது. செய்தியை அடுத்து நேற்றுப் பகல் அந்தச் சுவரொட்டிகள் அகற்றப்பட்டு கல்லூரி மதில் வர்ணம் பூசிச் சீர்செய்யப்பட்டுள்ளது.



நேற்று முன்தினம் மதிலின் தோற்றம்



நேற்று மதிலின் தோற்றம்

## மாணவரின் புறச் செயற்பாடுகளுக்கு 6 மாதங்களுக்கு முழுமையாகத் தடை

இலங்கையில் அனைத்து பாடசாலை மாணவர்களின் வெளிபுறச் செயற்பாடுகளுக்கு எதிர்வரும் 6 மாதங்களுக்கு முழுமையாகத் தடை விதிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களைக் கல்வி நடவடிக்கைகளில் மாத்திரம் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சு அனைத்து அதிபர்களுக்கும் அறிவித்துள்ளது.

அதற்கமைய விளையாட்டுப் போட்டிகள், விவாத போட்டிகள் மற்றும் சாகித்திய போட்டிகள் போன்றவற்றில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் சர்வதேச, அகில இலங்கைப் போட்டிகளில் மாத்திரம் ஈடுபடுவதற்கு பாடாசாலை மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு கல்வி அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.

பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் கல்வி ஊழியர்கள் தமது விடுமுறையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# ரவி கருணாநாயக்க மீதான பிடியாணை இடைநிறுத்தம்

கொழும்பு,ஜூலை08

**மத்திய வங்கியின் பிணை முறிகள் மோசடி தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 7 பேரைக் கைது செய்வதற்காகக் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணை உத்தரவை இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.**

ரவி கருணாநாயக்க உள்ளிட்ட சந்தேக நபர்கள் தமக்கு எதிரான பிடியாணை அமுல்படுத்துவதை இடைநிறுத்தி எழுத்தாணை உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு இன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பரீசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பிடியாணையை இடைநிறுத்தி உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் மனு மீதான விசாரணையை நிறைவு செய்யும் வரை கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணை உத்தரவை இடைநிறுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நவாஸ், நீதியரசர்கள் ஷிரான் குணரத்ன மற்றும் சோபித்த ராஜகருணா ஆகியோரைக் கொண்ட ஆயம் முன்னிலையில் இந்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மத்திய வங்கியின் பிணைமுறிகள் ஏலத்தின் போது, 51.98 பில்லியன் ரூபா நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 10 பேருக்கு எதிராகக் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் பிடியாணை



பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இன்று பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவானது பிணை முறிகள் மோசடி விவகாரம் தொடர்பான விவகாரம் தொடர்பில் எவ்வித இடையூறாகவும் அமையக்கூடாது என நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் சந்தேகநபர்கள் வழங்க வேண்டும் எனவும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

## மத்திய கலாசார நிதிய ஊழியர்களின் சம்பளத்துக்கு திறைசேரி மூலம் நிதி!

இலங்கையில் வருமானம் இழந்துள்ள மத்திய கலாசார நிதிய ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஏனைய பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக, திறைசேரியின் ஊடாக நிதியை ஒதுக்குவதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில், சுற்றுலா நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மத்திய கலாசார நிதிய ஊழியர்கள் தமது வருமானத்தை இழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார் என அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, மத்திய கலாசார நிதிய ஊழியர்களின் சம்பளத்திற்காக மாதாந்தம் சுமார் 11 கோடி ரூபாவும், பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக சுமார் இரண்டு கோடியே 50 லட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கப்பட வேண்டும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

மத்திய கலாசார நிதியத்தில் நிலையான தொழிலாளர்கள் இரண்டாயிரத்து 330 பேர் பணிபுரிகின்ற அதேவேளை, சாதாரண மற்றும் ஏனைய ஊழியர்கள் 230 பேர் பணிபுரிகின்றனர். இந்த நிலையிலேயே, சுற்றுலாத் துறை வழமைக்குத் திரும்பும் வரை, அவர்களின் சம்பளம் மற்றும் ஏனைய பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக, 13 கோடியே 50 லட்சம் ரூபா நிதியை திறைசேரியிலிருந்து மாதாந்தம் ஒதுக்குவதற்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.

# வாக்கெடுப்புக் கடமையில் கவனயீனமாக நடந்த 32 தேர்தல் அதிகாரிகளுக்கு ஐந்து வருடத் தடை

## மட்டக்களப்பில் தேர்தல் ஆயத்தக் கூட்டத்தில் தகவல்



2020 ஆம் ஆண்டுக்கான பொதுத் தேர்தலில் ஒருமீட்டர் இடைவெளி பேணுதல், முகக்கவசம் அணிதல் மற்றும் தொற்றுநீக்கிகளால் கைகளை சுத்தம்செய்தல் போன்ற மூன்று பிரதான விடயங்கள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல் விடுத்துள்ளதாக நேற்று மாலை மட்டக்களப்பு மாவட்டசெயலகத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல் ஏற்பாடு தொடர்பான விசேட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான திருமதி. கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த விசேடகூட்டத்தில் மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் ஆர்,சசீலன், மேலதிக அரசாங்க அதிபரும் தேர்தல்கள் கட்டுப்பாட்டுப்பிரிவின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த். முறைப்பாட்டுப் பிரிவின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரான திருமதி நவரூப ரஞ்சனி. போக்குவரத்துப் பிரிவின் உதவித் தெரிவத்தாட்சி அலு வலரான எம்.எஸ். பசீர. ஆகியோரோரல் இத்தேர்தல் முன்னேற்பாடுகள் பற்றி அங்கு தெளிவூட்டப்பட்டது.

மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஆர்,சசீலன் கருத்து வெளியிடுகையில் -

கடந்ததேர்தலில் வாக்கெடுப்பு நிலைய கடமையில் கவனயீனமாக நடந்த 32 தலைமைதாங்கும் தேர்தல் கடமை உத்தியோகத்தர்கள் ஐந்து வருடங்களுக்குத் தேர்தல் கடமையில் இணைத்துக் கொள்ளாதவாறு தேர்தல் கடமையில் இருந்தும் தடை செய்யப்பட்டிருக்கின்றனர். இத்தேர்தலிலும் இந்தத் தவறுக்கு இடமளிக்கப்படக் கூடாது. - என்றார்.

மேலும் மாற்று திறனாளிகள் வாக்களிக்கப்பதற்குப் போக்குவரத்து வசதி செய்ய முன் கூட்டியே வைத்திய அத்தாட்சிப்பத்திரம் சமர்பிக்குமாறு பிரதேச மட்டத் தேர்தல் ஏற்பாடு உத்தியோகத்தர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். தேர்தலுக்கு மறுநாள் ஆறாம் திகதி இரவு மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் முடிவுகளை வெளியிட எதிர்பார்க்கப்படுவதாகவும், அன்றைய தினம் காலை எட்டு மணிக்கே வாக்குகள் எண்ணும்பணிகள் ஆரம்பிக்கப்படும், விருப்பு வாக்குகள் எண்ணும் பணிகள் மறுநாள் ஏழாம் திகதியே நடைபெறும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது

அத்துடன் பிரதான வாக்கெண்ணும் உத்தியோகத்தர்களின் கடமைக்கு ஆள் பற்றாக்குறை நிலவுவதால் தம் பிரிவுக்கான கடமைகளுக்கு மேலதிகமாக இம்முறை அக்கடமைகளைச் செய்யும் பணியை பிரதேச செயலாளர்களும் பொறுப்பேற்றுள்ளனர். சுகாதாரவழி முறைகளுக்கமைய தேர்தலை நடத்தும் விசேட வழி காட்டல்கள் அடங்கிய அறிவுறுத்தல்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இது சட்டமாக்கப்பட்டதும் தேர்தல்கள் ஆணையகம் திணைக்களத்துக்கு அறிவிக்கும். இதன் பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.சசீலன் மேலும் தெரிவித்தார்.

பிரதேச மட்டத் தேர்தல் ஏற்பாட்டுக் குழுவின் உத்தியோகத்தர்களான பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர், நிர்வாக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் வாக்களிப்பு நிலையங்கள், அதற்கான கட்டட மற்றும் வசதிகளை பெற்றுக் கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் என்பன குறித்தும் அங்கு கலந்துரையாடப்பட்டது.

# வாகனம் கையளிக்காத இராஜாங்க அமைச்சர்கள்

## சட்ட நடவடிக்கைக்கு ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 08

பதவிக் காலத்தில் பயன்படுத்திய வாகனங்களை இதுவரை அமைச்சிடம் கையளிக்காத இராஜாங்க அமைச்சர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதுவரை கையளிக்கப்படாத 11 வாகனங்கள் தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கிய தகவல்களுக்கு அமைய மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

பிரிவுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகள் மற்றும் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பொதுத் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் அமைச்சர்கள் சிலரிடமுள்ள 13 வாகனங்கள் இதுவரை கையளிக்கப்படாமை குறித்து முறைப்பாடு கிடைக்கப்பெற்றதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவற்றில் இரண்டு வாகனங்களை முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஒருவர் குறித்த அமைச்சிடம் ஒப்படைத்துள்ளார்.

இதேவேளை, வாகனங்களை மீள பெற்றுக் கொள்வது தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவில் இன்று கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இதில் கலந்துகொள்ளுமாறு அந்த அமைச்சுகளின் அதிகாரிகளுக்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

# மட்டக்களப்பில் அகற்றப்படும் சுவரொட்டிகள், பதாதைகள்!

*மட்டக்களப்பு, ஜூலை 07*


*எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் பொருட்டு ஒட்டப்பட்ட சுவரொட்டிகள், பதாதைகள் என்பன மட்டக்களப்பில் அகற்றப்பட்டு வருகின்றன.*

*வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை பொலிஸார் அகற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.*



# ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதாக எண்ணி தமிழரைக் கொச்சைப்படுத்துகிறார் விக்கி

## ஆயுதப் போராளிகள் குறித்துப் பேசுவதற்கு அவருக்கு அருகதை இல்லை என்கின்றார் கணேஷ் வேலாயுதம்



போராளிகளை குறித்து பேசுவதற்கல்ல வாய் திறப்பதற்கே சீ.வி.விக்னேஷ்வரனுக்கு அருகதை இல்லை..! 5 வருடம் அவர் இருந்தது கதிரையில் அல்ல போராளிகளின் தியாகத்தில்...

ஆயுதம் தாங்கிப் போராடியவர்கள் பெற்றுக் கொடுத்த மாகாணசபைக் கதிரையை 5 வருடங்களா பிடித்துக் கொண்டிருந்து மக்களுக்கு ஒன்றுமே செய்யாத சி.வீ.விக்னேஸ்வரன், ஆயுதப் போராட்ட இயக்கங்களைச் சேர்ந்தவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம்எனக்கூறுவதற்குஎந்தவொருஅருகதையும் அற்றவர்.

நான்சி.வீ.விக்னேஸ்வரனுக்கு சவால்விடுகிறேன். 12 மணிக்கு நித்திரைக்குச் சென்று 4 மணிக்கு நித்திரையால் எழும்பியதை தவிர அவர் வேறு என்ன சாதித்தார்? அதனைக் கூற முடியுமா? இரணைமடு, சுன்னாகம் நிலத்தடி நீர், நெல்சிப் எனப் பல ஊழல் மோசடிகளுக்கு என்ன நடவடிக்கை எடுத்தார்? என்ன எடுக்க முடிந்தது?

– மேற்கண்டவாறு ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்.தேர்தல் மாவட்டத் தலைமை வேட்பாளர் கணேஷ் வேலாயுதம் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பாக இன்று யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அக்கு மேலும் அவர் கூறியவை வருமாறு:–

சி.வீ.விக்னேஸ்வரன் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே ஆயுதப் போராட்ட வழியில் இருந்து வந்தவர்களுக்கும், அரச கட்சிகளுக்கும் மக்களை ஆதரவளிக்க வேண்டாம் எனக் கூறியிருக்கின்றார். அவருடைய கட்சியிலேயே ஆயுத போராட்டம் சார்ந்த 4 பேர் இருக்கையில் அவர் இப்படி கூறுகிறார்.

ஆகவே உட்கட்சிக்குள் முறுகல் இருப்பதை அவரே அம்பலப்படுத்துகிறார். இதே விக்னேஸ்வரன் 5 வருடங்கள் இருந்த மாகாணசபை கதிரை ஆயுதம் தாங்கிப் போராடியவர்களால்தான் அவருக்குக் கிடைத்தது. அதையும் ஒழுங்காக பயன்படுத்த தெரியாமல் கவிழ்த்து கொட்டியதே மிச்சம். இதே முதலமைச்சர் மாகாணசபையை பொறுப்பேற்கும்போது 6வது இடத்திலிருந்த மாகாணத்தின் கல்வி இவர் பதவியேற்றதன் பின்னர் எங்கே சென்றது என்பது அனைவருக்கும் தெரியும். இவருக்கு ஆயுதப்போராட்ட வழியில் இருந்து வந்தவர்களை குறித்து பேசுவதற்கு என்ன அருகதை உள்ளது? 1983 காலப்பகுதியில் நாங்கள் ஆயுதமேந்தி போராடியபோது அப்போதைய பிரதமர் ரணசிங்க பிறேமதாஸவுக்காக மேடை ஏறியவர் இவர்

2009 ஆம் ஆண்டு இனம் அழிக்கப்பட்டபோது எங்கே இருந்தார்? எனக்கு தெரிந்த தமிழ் அரசியல் கைதிகள் சொல்வார்கள் 'இவர் நீதிமன்றுக்கு வந்துவிடக்கூடாது, சிங்கள நீதிபதிகள் வரவேண்டும்' எனத் தாங்கள் கும்பிடுவார்களாம். அந்தளவுக்கு கடமையான தண்டனைகளை கொடுப்பவராம். மேலும் அவரே கூறுகிறார் 2013 ஆம் ஆண்டு கனடாவுக்கு வீசா கிடைத்திருந்தால் தான் கனடாவுக்குச் சென்றிருப்பேன் என.

மேலும் மாகாணசபை ஆட்சியில் 4 ஆவது வருடத்தில் பிரச்சினை கிளம்பியபோது இவர் ஒழுங்கான ஆளாக இருந்திருந்தால் பதவியை தூக்கி வீசிவிட்டு சென்றிருப்பார். ஆனால் 5 வருடங்களும் கதிரை ஆசையில் ஆட்சியைப் பிடித்துவைத்திருந்தவர் இப்போது தனக்கு 5 வருடங்கள் கேட்கிறார்.

எமக்கெல்லாம் மக்கள் ஒருமுறை தந்தால் போதும். அடுத்தமுறை மக்களிடம் கேட்கமாட்டோம். மக்களே தருவார்கள். அந்தளவுக்கு வேலை செய்வோம். இவர்கள் ஒன்றையும் செய்யாமல், ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதாக கூறிக்கொண்டு தமிழர்களை கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கின்றார். நான் இங்கு பேசியவற்றுக்காவது விக்னேஸ்வரன். பலனிக்க வேண்டும். அதை நான் எதிர்பார்கிறேன். – என்றார்.

## யாழ் மாவட்டத்தில் சு.கவின் மகளிர் வேட்பாளர் களத்தில்

தேர்தல் பரப்புரைகள் சூடுபிடித்திருக்கின்றன. இந்த முறை தேர்தல் களத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக முதல் தடவையாகப் போட்டியிடுகின்ற பெண் வேட்பாளரும், வர்த்தகத்துறைப் பட்டதாரியுமான பவதாரணி ராஜசிங்கம் யாழ்ப்பாணம், அரசடியில் மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். மக்கள் குறைகளைக் கேட்டறிந்தார். மக்களுடன் அளவளாவினார்.

இந்தச் சந்திப்பை முன்னின்று வழிநடத்திய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முதன்மை வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தனது கட்சியின் புதிய பெண் வேட்பாளரான பவதாரணி ராஜசிங்கத்தை அரசடி மக்களுக்கு அறிமுகப்படுத்தியமையுடன், அவரது சேவை மனப்பான்மை மற்றும் கல்வித் தரம்,அவர் மக்களுக்கு ஆற்றவுள்ள சேவைகள் குறித்தும் விதந்து பேசினார்.

சமூகத்தில் கவனிக்கப்படாதிருக்கின்ற பெண்களுக்கான குரலாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சேவையாற்றுவதற்காக பவதாரணி ராஜசிங்கத்தைத் தனது கட்சி வேட்பாளராகத் தெரிவு செய்திருக்கிறேன் என்று தெரிவித்தார்.






## வடக்கு கிழக்கு பொருளாதார அபிவிருத்தி நடுவகத்தின் மட்டு. மாவட்டத்துக்கான வீட்டுத் தோட்டச் செயற்பாடு



கொரோனா வைரஸின் பரவலைத் தடுக்கு முகமாக அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஊரடங்கலை அடுத்து 'வடக்கு, கிழக்குப் பொருளாதார அபிவிருத்தி நடுவத்தினால்' (NEED Centre) பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசங்களில் வாழும் சுமார் 7,000 குடும்பங்களுக்கு கனடிய புலம்பெயர் உறவுகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளின் நிதிப் பங்களிப்புடன் ஒரு வாரத்திற்கான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டிருந்தன.

இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வீட்டுத்தோட்டங்களை 'வடக்கு கிழக்குப் பொருளாதார அபிவிருத்தி நடுவம்' உருவாக்கி வருகின்றது.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தன்னாமுனை, பாவற்கொடிச்சேனை, கதிரவெளி ஆகிய கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வீட்டுத்தோட்டங்களை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தன்னாமுனை கிராமத்தில் சுமார் 200 குடும்பங்கள் வீட்டுத்தோட்டச் செயற்திட்டத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஜூலை 3 வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் 50 பயனாளிகளுக்கு மரக்கறி நாற்றுக்கள் மற்றும் விதைகள் வழங்கப்பட்டன.

இத் திட்டமானது வடக்கு, கிழக்குப் பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் தொடர் கண்காணிப்புடனும், ஆலோசனையுடனும் நடைமுறைப்படுத்தப்படும்.

இத் தன்னாமுனை கிராம வீட்டுத்தோட்டச் செயற்பாட்டுக்கு அமரத்துவமடைந்த திரு எ. எவ். கோமேஸ் அவர்களின் ஞாபகார்த்தமாக கனடாவிலுள்ள பிறின்ற் பாஸ்ற் (Print Fast) நிறுவனம் அனுசரணை வழங்கியுள்ளது.

இந்நிகழ்வில் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் உதயகுமார், திருமதி யோனிலாமேரி – பொருளாதர அபிவிருத்தி உத்தியோகத்தர், திருமதி அல்பொன்சா – மாதர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர், மயில்வாகனம் யோகேஸ்வரன் – பணிப்பாளர், பொன்னுத்துரை வினோதன் – திட்ட அலுவலர் ஆகியோரும் மற்றும் வடக்கு கிழக்குப் பொருளாதார அபிவிருத்தி நடுவகத்தைச் சேர்ந்தவர்களும், நலன்விரும்பிகளும் பங்குபற்றியிருந்தனர்.

இந்த வீட்டுத்தோட்டத் திட்டத்தின் ஊடாகப் பயனாளிகள் அன்றாட சுயதேவைக்கான உணவை அவர்களது வீட்டுத்தோட்டத்தில் பெற்றுக்கொள்வார்கள்.

இயற்கை முறையில் பயிர்களை உற்பத்தி செய்து, நஞ்சற்ற ஆரோக்கியமான உணவை மக்கள் உட்கொள்வதென்பது அவர்களது நோய் எதிர்ப்புச் சக்தியை வளர்ப்பதற்கு உதவுவதாகவும் இத்திட்டம் அமைகிறது.

'கொரோனா வைரஸ் தொற்று' ஏற்படுத்தும் அசாதாரண சூழ்நிலை காரணமாக ஊரடங்கல் ஏற்படும் நிலைமைகளில் மக்கள் தமது கிராமங்களிலேயே தமக்குத் தேவையான உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள வழிசெய்தலும் இத்திட்டத்தில் உள்ளடங்குகிறது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.07.2020 இல் வெளியிடப்பெற்றது.